2013 மே 6]

**404—**

**சர்க்கரை ஆலை**

***29137—திரு. சி.எச். சேகர்:**

*மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கும்மிடிப்பூண்டி தொகுதியில் சர்க்கரை ஆலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) சர்க்கரை வளாகம் அமைக்கவேண்டுமென்றால், குறைந்தபட்சம் 100 ஏக்கர் நிலம் தேவைப்படும். நிலத்தின் மதிப்பு உட்பட, புதிய ஆலை நிறுவுவதற்கு சுமார் 500 கோடி ரூபாய் தேவைப்படும். அத்துடன் 10 இலட்சம் லிட்டர் தண்ணீரும் தேவை என்ற காரணத்தால், நாள் ஒன்றுக்கு 2,500 மெட்ரிக் டன் திறன் கொண்ட சர்க்கரை ஆலை அமைப்பதற்கு 15 ஏக்கர் நிலத்தில் கரும்பு சாகுபடி மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதால், இச்சூழ்நிலையில் கும்மிடிப்பூண்டியில் போதிய அளவு கரும்பு சாகுபடி இல்லாத காரணத்தினாலும், போதிய அளவு தண்ணீர் வசதி இல்லாத காரணத்தினாலும் புதிய ஆலை அமைப்பதற்கு சாத்தியக் கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.எச். சேகர் அவர்கள்.*

**திரு. சி.எச். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் ஊத்துக்கோட்டை தாலுகாவில் சுமார் பத்தாயிரம் ஏக்கருக்கு மேல் கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது. இங்கு உற்பத்திச் செய்யப்படும் கரும்புகள் அரைப்பதற்கு சர்க்கரை ஆலை இல்லாத காரணத்தால், 60 கி.மீ. தொலைவில் உள்ள ஆந்திர மாநிலம் காலஹஸ்தியில் உள்ள மயூரா தொழிற்சாலைக்குக் கொண்டுசெல்லப்படுகின்றன. ஆகையால், தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான சர்க்கரை ஆலையை இங்கு

அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல, ஆந்திரா செல்ல வேண்டியதில்லை. 70 கி.மீ. தொலைவில் திருத்தணி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை இருக்கின்றது. இப்போது அங்குதான் சென்றுகொண்டிருக்கின்றது. கிட்டத்தட்ட 2, 4, ஆண்டுகளில் கணக்கில் எடுத்துப் பார்க்கின்றபோது, 500 ஏக்கர் மட்டும்தான் அங்கு கரும்பு சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே திருத்தணி கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்கே குறைந்த அளவிற்கு கரும்பு வந்துகொண்டிருக்கின்ற காரணத்தினால், புதிய சர்க்கரை ஆலை அமைப்பதற்கு சாத்தியக் கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.எச். சேகர் அவர்கள்.

**திரு. சி.எச். சேகர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதுபோல, திருவிளாங்காடு சர்க்கரை ஆலை 2,500 டன் கொள்ளளவு உள்ளது. அது பழமை வாய்ந்த சர்க்கரை ஆலை. 1984–1985 ஆம் ஆண்டில் துவங்கப்பட்டது. விழுப்புரம் மாவட்டத்தில் ஆறு சர்க்கரை ஆலைகளும், வேலூர் மாவட்டத்தில் நான்கு சர்க்கரை ஆலைகளும், கடலூர் மாவட்டத்தில் நான்கு சர்க்கரை ஆலைகளும் உள்ளன. அந்தப் பகுதியில் ஒரு சர்க்கரை ஆலை அமைக்கப்பட வேண்டுமென்பது கும்மிடிப்பூண்டி ஒன்றியம், எல்லாபுரம் ஒன்றியம், மீஞ்சூர் ஒன்றியம், சோழவரம் ஒன்றியம் ஆகிய பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாகும். ஆகையால், சர்க்கரை ஆலை இங்கு நிறுவப்பட்டால் இரண்டு தொகுதி மக்களும் பயன்பெறுவார்கள். அதோடு மட்டுமல்லாமல், திருவள்ளூர் மாவட்டத்தில் ஒரேயொரு சர்க்கரை ஆலை மட்டும்தான் உள்ளது. ஆகையால், இங்கு ஒரு சர்க்கரை ஆலை கொண்டு வர வேண்டுமென்பது அந்த மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கை. ஆகையால், சர்க்கரை ஆலையை அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2013 மே 6]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1990 ஆம் ஆண்டு மத்திய அரசு ஒரு சர்க்கரை ஆலை நிறுவுவதற்கு அனுமதி கொடுத்தது. 1992 ஆம் ஆண்டில் பதிவும் செய்யப்பட்டது. அதற்குப் பின்னால், ஆய்வு செய்கின்றபோது, போதிய அளவு கரும்பு இல்லாத காரணத்தால், சர்க்கரை ஆலை நிறுவுவதற்கு வாய்ப்பு இல்லை என்று அரசு உத்தரவிட்டு, அங்கு சர்க்கரை ஆலை நிறுவுவதற்கில்லையென்று முடிவு செய்துவிட்டார்கள். அந்தப் பகுதியில் கரும்பு போதிய அளவுக்கு இல்லை என்ற காரணத்தாலும், நகரமயம் ஆகிக்கொண்டிருக்கின்ற காரணத்தினாலும், போதியளவு கரும்பு பயிர் செய்வதற்கு போதிய நிலம் இல்லாத காரணத்தாலும் அந்த ஆலை தொடங்கப்பட வேண்டுமென்று மத்திய அரசு உத்தரவிட்டும்கூட ஆலை திறக்கப்படவில்லை. அங்கே போதிய கரும்பு இல்லையென்று சொல்லி, ஆலையை திறக்காத காரணத்தால், சர்க்கரை ஆலை அமைப்பதற்கு வாய்ப்புகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

முற்பகல் 10—45

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1944 ஆம் ஆண்டு தென் மாவட்டங்களில் முதன்முதலில் தொடங்கப்பட்ட சர்க்கரை ஆலை பாண்டியராஜபுரம் சர்க்கரை ஆலை. அது கடந்த 9 ஆண்டுக் காலமாக மூடப்பட்டு, இன்றைக்கு அங்கே தொழிலாளர்கள், விவசாயிகள் தொடர்ந்து போராடிக்கொண்டிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சரையும் சந்தித்து இருக்கிற நிலையில், அந்த ஆலை மீண்டும் திறக்கப்படுமா? அங்கு, அந்த நேரத்தில் பணியாற்றிய, கிட்டத்தட்ட 500—க்கும் மேற்பட்ட தற்காலிகத் தொழிலாளர்களுக்கு எந்தப் பயனும் இல்லாமல் இருக்கிறது. அதற்கு உடன் தீர்வு காணப்படுமா என நான் அறிய விரும்புகிறேன்.

இன்றைக்குத் தமிழ்நாட்டில் தனியார் சர்க்கரை ஆலைகள் கூடுதலாகப் பெருகி வருகிற நிலையில், பல சர்க்கரை ஆலைகளில்,

விவசாயிகளுக்குக் காலத்தில் பணம் கிடைக்காத ஒரு நிலை நீடிக்கிறது. குறிப்பாக, சிவகங்கை மாவட்டம், சக்தி சர்க்கரை ஆலையில், கடந்த மூன்று ஆண்டுக் காலமாகப் பயிர்க் கடன்கூட கட்டாமல், இந்த ஆண்டு, மறு உற்பத்திச் செய்வதற்குக் கடன்கள் கிடைக்காமல், விவசாயிகள் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்குக் கரும்பு வெட்டியதற்கான பணமும் கொடுக்காமல், மிகப் பெரிய நிதி நெருக்கடியில் சக்தி சர்க்கரை ஆலை சிக்கியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. குணசேகரன், கேள்வியைக் கேளுங்கள். நீங்கள் விளக்கமாகப் பேசிக்கொண்டே போகிறீர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** நான்கரை இலட்சம் ஏக்கர் நிலத்திலே விவசாயம் நடைபெற்றிருக்கிற சக்தி ஆலையைக் கண்காணித்து, உடனடியாக பயிர்க் கடன், மறு கடன் கிடைப்பதற்கும், விவசாயிகளுக்கான பணம் கிடைப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதலில் கூறிய அந்த பாண்டியராஜபுரம் சர்க்கரை ஆலை என்பது கிட்டத்தட்ட 40 ஆண்டுகள் பழமையானது என்பது உண்மைதான். அதுகுறித்து, உயர் நீதிமன்றத்திலே வழக்கு இருந்து, இப்பொழுது அரசுக்குச் சாதகமாகத் தீர்ப்பு வந்திருக்கின்றது. தீர்ப்பு வந்ததற்குப் பின்னால், அந்த மில்லுக்கு உள்ளே சென்று பார்க்கின்றபோது, அங்கு உள்ளே இருக்கின்ற இயந்திரங்களெல்லாம் மிகவும் பழுதடைந்து, பயன்படுத்த முடியாத நிலைமைக்குத் தள்ளப்பட்டுவிட்டன எனத் தெரிகிறது என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதுமட்டுமல்லாமல், அங்கு தற்காலிகமாகப் பணியாற்றிக் கொண்டிருந்த ஊழியர்களுக்கு நிவாரணம் எதுவும் வழங்கப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சொல்லியிருக்கின்றார். ஏற்கெனவே, அங்கு நிரந்தர ஊழியர்களாக இருந்த அத்தனைப் பேருக்கும் ஊதியம் வழங்கப்பட்டுவிட்டது; அத்தனைப் பேருக்கும் பணம் வழங்கப்பட்டுவிட்டது. நிரந்தரமாக்கப்பட்டவர்கள் அத்தனைப் பேருக்கும் பணம் வழங்கப்பட்டுவிட்டது. நிரந்தரமில்லாதவர்களுக்குக்

கேட்கின்றார். நிரந்தரம் இல்லாதவர்கள், இத்தனை ஆண்டுக் காலமாக விட்டுவிட்டு இப்பொழுதுதான் கேட்டிருக்கின்றார்கள். என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தவுடன், அது ஆய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, அங்கே எத்தனை பேர் பணிபுரிந்தார்கள், எவ்வளவு ஆண்டுக் காலம் பணிபுரிந்திருக்கின்றார்கள் என்பதற்கான கணக்கெடுப்புப் பணி இப்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அது முடிந்தவுடன், அவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்குரிய ஆணை, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல, தனியார் சர்க்கரை ஆலையான சக்தி சர்க்கரை ஆலையிலிருந்து கரும்பு விவசாயிகளுக்குப் பணம் தரவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. ஏற்கெனவே, மாண்புமிகு அம்மா அவர்கள் சக்தி சர்க்கரை ஆலையிலிருந்து உடனடியாக விவசாயிகளுக்குப் பணம் தர வேண்டுமென்று ஆணையிட்டிருக்கின்றார்கள். கிட்டத்தட்ட 50, 60 சதவீதம் பணம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. விவசாயிகளுக்குப் பணம் கொடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 405, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. மனோகரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**405—**

## பேருந்து வசதி

***4403—திரு. க. மனோகரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருக்கழுகுன்றம்–மாமல்லபுரம் வழித்தடத்தில் காலை மற்றும் மாலை நேரங்களில் கூடுதல் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?